

தமிழர் இலக்கிய சமய பண்பாட்டு ஆய்விதழ்

# தமிழணங்கு

(தமிழராய் இணைவோம்)

மலர் - 3 இதழ் - 5

நவம்பர் - 2024

சிறப்பாசிரியர்
பொறிஞர் கவிஞர் முத்தமிழ் விரும்பி

நிறுவனர் & தலைமைப் பதிப்பாசிரியர்
முனைவர் திருமதி செ. இராஜேஸ்வரி

பொறுப்பாசிரியர்
முனைவர் சந்திரிகா சுப்பிரமணியன்

ஆசிரியர் குழு
கிங்ஸ்டன் ஜெகநாதன் (இந்தியா)
தேமொழி (அமெரிக்கா)
அன்பு ஜெயா (ஆஸ்திரேலியா)
மின்னச்சன் இங்கர்சால் (நோர்வே)
Dr. புதேரி தானப்பன் (டில்லி)

வடிவமைப்பு
அருணேஷ்

Thamizhanangu
Printed and Published by :
E.Satish Rajkumar (Advocate)
3/422, Thiruvalluvar Street, Dinamani Nagar,
Madhurai, Tamil Nadu – 625 018.
Ph : +91 78711 23226, +91 70109 97630

கட்டுரைகள் அனுப்ப..
rajetamiljuly1@gmail.com

இவ்விதழில் இடம்பெற்றுள்ளகருத்துகள் அனைத்தும் கட்டுரையாளர்களின் கருத்துகளே ஆகும். அவற்றுக்கும் இதழாசிரியருக்கும் எந்தத் தொடர்பும் இல்லை
– இதழ் ஆசிரியர்


## உள்ளடக்கம்

| | | |
|---|---|---|
| 1. | அருந்தமிழ் வளர்த்த அருளாளர்கள் – பேரா. முனைவர் மோரா. மைக்கேல் பாரடே | 3 |
| 2. | மெக்காலே முற்போக்குச் சிந்தனையின் முழு வடிவம் – முனைவர் சிவ இளங்கோ | 9 |
| 3. | பொன்னை விரும்பும் பூமி இது – பேரா. முனைவர். மு. முத்து வேலு | 19 |
| 4. | 'ழ'கரம் காப்போம்! – டாக்டர் புதேரி தானப்பன் | 23 |
| 5. | பௌத்தத்தை வெற்றி கொண்ட வைணவம் – முனைவர் செ. ராஜேஸ்வரி | 31 |
| 6. | புலம்பெயர்ந்தோர் இலக்கியம் : வாழ்வின் வலியும் இருப்பின் இன்னல்களும் – முனைவர் ச. சீனிவாசன் | 41 |
| 7. | நன்னெறி வழங்கும் சமுதாய வாழ்வியல் நெறிகள் – கி செயராமன் | 51 |
| 8. | எளிய முறையில் யாப்பறிவோம்! – இராம இளங்கோவன் | 64 |
| 9. | தாமரை – அனந்தபுரம் கிருஷ்ணமூர்த்தி | 69 |
| 10. | தமிழ்த் திரைப்படங்களில் படத்தொகுப்புத் திறன் – 5 – எஸ். தேவராஜ். டி.எப்.டி | 73 |
| 11. | தமிழ் வேளாண்மையும் சுமேரிய வேளாண்மையும் – ஒரு ஒப்பாய்வு – 2 – மெய். சித்ரா எஸ். | 79 |
| 12. | ஆழ்வார்கள் அறிமுகம் – 6 – ஜனக்புரி சீனிவாசன் | 87 |
| 13. | திருவள்ளுவர் கண்டிக்கும் பெருங் குற்றம் பேராசிரியர் முனைவர் மு. முத்துவேலு | 93 |
| 14. | சோழர் கால ஓவியங்கள்.. 6 – மாரிராஜன் | 95 |
| 15. | நூலறி(வு)முகம் – வித்யா மனோகர் | 99 |



Scanned with OKEN Scanner

# புலம்பெயர்ந்தோர் இலக்கியம் : வாழ்வின் வலியும் இருப்பின் இன்னல்களும்



முனைவர் ச. சீனிவாசன்
பேராசிரியர் & தலைவர், தமிழ்த்துறை, ஸ்ரீ வெங்கடேஸ்வரா கல்லூரி

## முன்னுரை

மனித இனம் தோன்றிய காலத்திலிருந்து அவன் ஓரிடத்தை விட்டு இன்னொரு இடத்திற்கு இடம்பெயர்வதை இயல்பாகக் கொண்டிருக்கிறான். நாடோடி வாழ்க்கையிலிருந்து மேம்பட்டு இனக்குழு வாழ்க்கைக்கு மாறிய மனிதன் உணவு மற்றும் உறைவிடம் தேடி அடிக்கடி இடம்பெயர்ந்திருக்கிறான். நாட்டில் நிலவிய சமூக, பொருளாதார, அரசியல் சூழல்கள் மானுட இனத்தின் புலப்பெயர்தலை மேலும் விரிவாக்கியது. புலம்பெயர்ந்து பல்வேறு இடங்களுக்கும் நாடுகளுக்கும் சென்றவர்களின் வலியும், துயரங்களும், இன்னல்களும் ஒரே மாதிரியானவைகள் அல்ல. நுட்பமான வேறுபாடுகளைக் கொண்டவை. 'புலம்பெயர் வாழ்க்கை பலருக்கு நல்வாழ்வைத் தந்தது போன்ற தோற்றம் இருப்பினும் உண்மையில் அதிக அளவுக்கு வலியைத்தான் ஏற்படுத்தியிருக்கிறது. நம்பிக்கையற்ற நிலையில், புலம்பெயர் இலக்கியம் பெரும்பாலும் விரக்தியையும் சோகத்தையுமே கொண்டிருக்கிறது' எனக் கருதுகிறார் ஆச்சாரி.

புலம்பெயர்ந்து வேற்று நாட்டில் வாழும் தமிழர்களிடையே மொழி, கலை, பண்பாடு போன்ற நடைமுறைகளில் சிக்கல்களும், தாக்கங்களும் நிலவுவதைக் காணமுடிக்கிறது. அந்நிய நாட்டில் சொந்த நாட்டின் தாய் மொழியைப் பேசவும் எழுதவும் வாய்ப்பில்லாமலும், ஆர்வமில்லாமலும் இருப்பதை அறியமுடிக்கிறது. புலம்பெயர்ந்த தமிழர்கள் மிகுதியும் மேலை நாடுகளில் தஞ்சம் அடைந்துள்ளதால் அந்தந்த நாட்டு நடை, உடை, உணவு, பழக்கவழக்கங்களின் தாக்கம் தவிர்க்க முடியாததாக உள்ளது. சென்று வாழும் நாட்டின் கலாச்சாரத்தைச் சார்ந்தே வாழ வேண்டிய நிர்பந்தம் இருப்பதால் சொந்த நாட்டின் கலை மற்றும் பண்பாடுகளைத் தொலைத்து அல்லல்ப் படுகின்றனர். இலங்கை இனப்படுகொலையிலிருந்து தப்பித்து மேற்குலகத்திற்குப் புலம்பெயர முடியாத ஈழத்துத் தமிழர்கள் பலர் தமிழகத்திற்குப் புலம்பெயர்ந்தனர். அவர்கள், இன்னும் அகதி முகாம்களில் சிரமப்படுவது கண்கூடு.



Scanned with OKEN Scanner